# பலாலி விமானப்படைத்தள விஸ்தரிப்புக்கு 645 ஏக்கர் காணி சுவீகரிப்பு

விலை ரூபா 1-25

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 6 ஷவ்வா 11 இதழ் 129
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20-6-1986

(அலுவலக நிருபர்)

பலாலி விமானப்படைத்தள விஸ்தரிப்புக்கு 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்துக்குள் சுமார் 645 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதற்குள் 400 காணித் துண்டுகள் உள்ளடக்கியுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இக்காணித் துண்டுகளுக்குள் 250க்கு மேற்பட்ட நிரந்தர-தற்காலிக வீடுகள், குடிசைகள் அடங்கியுள்ளன.

இவ்வில்லங்களில்வசித்தோர் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற அராஜக நடவடிக்கைகளால் பீதியடைந்து வெளியேறியுள்ளனர்.

இதனுல் இப்பகுயில் குத்தகைக்கும் சொந்தமாகவும் இக் காணிகளில் விவசாயம் செய்து ஜீவனம் நடாத்தியவர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாவார்கள் என தெரியவருகிறது.

பலாலி விமானத்தள 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்துக்குள் மயிலிட்டி வடக்கு, தெற்கு கிராம சேவையாளர்கள் பிரிவுகளும், பலாலி கிராம சேவையாளர் பிரிவும் அடங்கியுள்ளன. [மா]

## இராணுவ சோதனை முகாம்

(வவனியா)

வவனியா-ஹொரவப்பொத்தானை 2ம் கட்டை என்னும் இடத்தில் வாகனங்கள் சோதனையிடும் பொருட்டு இராணுவ சோதனை முகாம் ஒன்று கடந்த சிலதினங்களாக அமைக்கப்பட்டது. (பி)

# கிளிநொச்சியில் தொடரும் மோதல்: போராளிகள் தாக்கியதில் ராணுவ அதிகாரி பலி ஐவர் காயம்

(கொழும்பு)

**கிளிநொச்சியிலிருந்து மேற்கே சுமார் இரண்டு மைல் தொலைவில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை போராளிகள் நேற்று தாக்கியதில் ஒரு இராணுவ அதிகாரி பலியானுர். ஐவர் படுகாயமடைந்தனர்.**

கிளிநொச்சியில் சுமார் 2 மைல் சுற்று வட்டாரத்தில் மேற்படி பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இச் சமயம் பாதுகாப்புப் படையினரைத் தீவிரவாதிகள் எதிர்கொண்டு தாக்கினர். இச்சம்பவத்தில் ஒருஇராணுவ அதிகாரி பலியானுர். மேலும் ஐவர் காயமடைந்தனர் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சம்பவத்தில் காயமடைந்த இராணுவத்தினர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்று மேலும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

# இலங்கையின் யோசனைகளை இந்தியா ஆராய்கிறது

## 'அமிர்' புதுடில்லி விரைந்தார்

(புதுடில்லி)

இனப்பிரச்னை சம்பந்தமாக இலங்கை அரசினுல் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் சமர்ப்பிக்கப்பட்ட புதிய ஆலோசனைகளும் திட்டங்களும் தற்போது நன்கு ஆராயப்பட்டுவருகின்றன.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு பாரிஸில் தற்போது நடைபெற்றுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை தனது பிரேரணைகளை வெளியிட்டிருப்பதன் நோக்கம் குறித்து இந்தியத் தரப்பில் சந்தேகம் எழுந்துள்ளது.

இதே வேளை இலங்கை அரசின் பிரேரணைகள் தமிழ் பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசிக்கப்படும் என்று இந்திய அதிகாரி தெரிவித்திருக்கும் இதே வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் புதுடில்லி சென்றிருப்பது குறிப்பிடத் தக்கது. (பி)

# கிளிநொச்சி – முல்லைத்தீவு நேரடி மோதலின்போது 'ஹெலி, 'ஸ்கவுட்கார் சேதம்

(அலுவலக நிருபர்)

கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளுக்குமிடையே நேற்று இடம் பெற்ற நேரடி மோதலில் பல இராணுவத்தினர் பலியானுர்கள்;பலர் படுகாயமடைந்தனர். ஸ்கவுட் காரும், ஹெலிகொப்டரும் சேதமடைந்தன.

## புலிகள் அறிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இவ் விபரங்கள் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

### கிளிநொச்சியில்

கிளிநொச்சி ராணுவ முகாமிலிருந்து திருநகர் ஊடாகவும், ஜெயந்திநகர் ஊடாகவும் நேற்றுக் காலை 10 மணியளவில் ஒரு ஸ்கவுட் கார் உட்பட 3 கவச வாகனங்களிலும் நடைபவனியாகவும் சுமார் 150 ராணுவத்தினர் வெளியே வந்தனர். திருநகரில் கனகராயன் வீதியால் வந்துகொண்டிருந்த போது எமது தரப்பினர் 'றொக்கட் லோஞ்சர்' மூலம் தாக்கியதில் ஒரு 'ஸ்கவுட் கார்' முற்றுகச் சேதமானது. ஜெயந்தி நகரில் இருந்தும் எமது தரப்பினர் தாக்கியபோதும் ஒரு லெப்டினன்ட் உட்படப் பல ராணுவத்தினர் பலியானதுடன் பலர் காயமடைந்தனர். இந்நேரடி மோதலின் போது எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை. இச்சம்பவத்தின் போது இராணுவதரப்பிடமிருந்து பல மோட்டார் ஷெல்லுகளும், இரவைச்சங்கிலிகளும் எம்மால் கைப்பற்றப்பட்டன. இச் சம்பவத்தின் போது பொம்பர்களும், ஹெலி

(8ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில்: பொம்பர் தாக்குதல் இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற விமானக்குண்டுவீச்சுச் சம்பவத்தால் பொதுமக்கள்இருவர் பலியானுர்கள். சில வீடுகள் சேதமடைந்தன.

இரு பொம்பர் விமானங்கள் இக்குண்டுவீச்சில் ஈடுபட்டன. (மா)

# ஜூன்மாத தபாலக ஒய்வூதிய திகதிகள்

(யாழ்ப்பாணம்)

ஜூன்மாதத்திற்குரிய தபாலக ஒய்வூதியம் பின்வரும் திகதிகளில் வழங்கப்படும் என யாழ் தபால் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

ஜூன் 25 அளவெட்டி, காரைநகர் சாவகச்சேரி, வேலணை, ஜூன்26 அச்சுவேலி, புங்குடுதீவு, சுழிபுரம், காங்கேசன்துறை, ஜூன் 27 யாழ்ப்பாணம், கைதடி

ஜூலை 11 பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, சுன்னுகம், வசாவிளான்ஜூலை2 தெல்லிப்பழை, கோப்பாய், பண்டத்தரிப்பு,வண்ணுர்பண்ணை. ஜூலை 3 கொக்குவில், மானிப்பாய், உரும்பராய், யாழ்ப்பாணம் ஜூலை 4 கரவெட்டி, வல்வெட்டித்துறை,சங்கானை,கொடிகாமம் ஜூன் 7 ஊர்காவற்றுறை நெடுந்தீவு, அனலைதீவு, நயினுதீவு. (செ]

# 'எமது பிரதேசங்களில் விவசாய உற்பத்தியும் சுயதேவைப் பூர்த்தியும்'

## இருநாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'எமது பிரதேசங்களில் விவசாய உற்பத்தியும் சுயதேவைப்பூர்த்தியும்' பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும் அடுத்தநாள் ஞாயிற்றுக் கிழமையும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

ஆய்வு நிறுவனத்தினரால் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

21-ந் திகதி நாளை சனிக்கிழமை. மு ப. 9-00 விவசாயஉற்பத்திக்குரிய வளங்களும் வாய்ப்புக்களும், தலைவர்: கலாநிதி இ. மதனுகரன், [சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம், நீர்வளமும் பயன்பாடும், திரு. த. குணசேகரம் (நிலநீர் சரிதவியலாளர்), மண்வளமும் நீர்கட்டுப்பாடும், திரு. வீ. துருவசங்கரி, மழை வீழ்ச்சிப் போக்கும் வரட்சி நிலையும், திரு. எஸ். பாலச்சந்திரன், விவசாயத்துறைக்கு பொருத்தமான தொழில் நுட்பம், திரு. ம. ஜோர்ஜ் பிள்ளைநாயகம்.

கலந்துரையாடல்:

பிற்பகல் 1மணிமுதல் 3மணி வரை விவசாய உற்பத்திகள் தலைவர் கலாநிதி இ. மதனுகரன் சிரேஷ்டவிரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்.

நெல் உற்பத்தி இன்றும் நாளையும் கலாநிதி ஆ. சி. விவேகானந்தன், பணப்பயிர் பயிரீடும் எதிர்காலத்திட்டங்களும்:திரு ஏ செந்தில்நாதன் மரக்கறிவகைப் பயிரீடு; திரு. பென் எமஸன் கலந்துரையாடல்.

நாளை மறுதினம் மு.ப. 9-00- பி.ப. 12-00 பயிரின பீடைகள்-நோய்கள் - தடுப்பு முறை

(8ம் பக்கம் பார்க்க)

# கச்சேரியின் முக்கிய பிரிவுகள் பளைக்கு இடமாற்ற ஏற்பாடு

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் உள்ள பாடசாலைகள் யாவும் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையிலேயே யுள்ளன. இதனுல் சுமார் பதினையாயிரம் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது. இதேவேளை கிளிநொச்சிப் பகுதியிலிருந்து வெளியேறிய சுமார் ஐம்பதாயிரம் பொது மக்கள் இதுவரை தமது சொந்த இடங்களுக்கு திரும்பவில்லை.

கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு சமீபத்தில் உள்ள கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் வாசஸ்தலம் பரந்தனில் உள்ள இரசாயன கூட்டுத்தாபன விடுதிக்கு இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கச்சேரியின் முக்கிய பிரிவுகள் பளையில் இயங்கவும் இப்பிரிவுகளுக்கு பொறுப்பான அதிகாரிகள் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சி கச்சேரி, தபால் நிலையம், நீர்ப்பாசனத் திணைக்களம், பெற்றோலியம் கூட்டுத்தாபனம், உரக் கூட்டுத் தாபனம், விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் உட்படப் பல்வேறு அரச அலுவலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களும் கிளிநொச்சி வ.பி.போ.ச, டிப்போ ஊழியர்களும் பாதுகாப்பின்மையைக் கருதி கடமைக்குச் செல்ல அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே கிளிநொச்சி பழைய பஸ் நிலையப் பகுதியில் உள்ள சில வர்த்தகர்கள் மிகுந்தசிரமத்தின் மத்தியில் வாத்தக நிலையங்களில் உள்ள சாமான்களை அப்புறப்படுத்தினுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

3 படுக்கை அறைகள் மின்சார பைப் வசதியுடன் 1½ பரப்பில் வசதியான புதுவீடு பெரியகடைக்கு அண்மையில் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு. 435, கஸ்தூரியார் வீதி, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C 2955)

ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 5 பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- வே பத்மநாதன் [கிச்சி], உரும்பராய் கிழக்கு, உரும்பராய். [C-2968]

அல்சேசன் நாய் ஒன்று விற்பனைக்குண்டு. கறுப்பு நிறம் கன்னிகுட்டி போடும் பருவம். தொடர்பு:- திருமதி சுந்தரம் சுன்னாகம் கிழக்கு ப. நோ. கூ. சங்கம் (28 வது கிளை அருகாமை), சுன்னாகம். [C-2982]

என்ஜினியர் ஒருவரின் வீட்டுத் தளபாடங்கள் Pioneer Amp. செற், தேக்கு அலுமாரிகள், Vono Spring Double Beds, கட்டில்கள், கண்ணாடி மேசைகள், கிளாஸ் வகைகள், Dinner Sets, Pyrex, Typewriter, புத்தக அலுமாரி, குசினி கபேட் மேசைகள், கம்பளிகள் மற்றும் பல உடன் விற்பனைக்கு. New No: 262, பிரதான வீதி, [Dr. தருமலிங்கம் டிஸ்பன்சறி அருகாமையில்], யாழ்ப்பாணம். C 2979

எமது சைவப்பிரகாச அச்சுயந்திரசாலைக் கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட கதவு, யன்னல், ஓடு, தகரம், மரம் ஆகியனவும், அச்சககேஸ், தளபாடங்கள் விற்பனைக்குண்டு. வண்ணார்பண்ணை கல்லூரிவீதியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வேலை நாட்களில் காலை 9-00—12-00 மணிவரை இவற்றைப் பார்வையிடலாம். தங்கள் விலை மதிப்பீட்டை எழுத்துமூலம் செயலாளர், சைவபரிபாலன சபை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வழங்குக. C-841

## தேவை

அனுபவம் மிக்க அச்சுக் கோப்பாளர்கள் தேவை, நேரில் வரவும். பகுதி நேரமாகப் பணிபுரிய விரும்புபவர்களும் நேரில்வரவும். செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [A 848)

மொத்தமாகவும், சில்லறையாகவும், பல சரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ள, நிர்வாகத் திறமை உள்ளவர் தேவை. உடன் நேரில் வரவும். லக்கி கவுஸ், திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. (C2946)

எமது உற்பத்திப் பொருட்களை பொலித்தீனில் அடைத்து பைக்கற் பண்ணக்கூடிய முன் அனுபவம் உடைய பெண் பிள்ளைகள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். சான்றிதழ்களுடன் நேரில் வரவும். நேரம்: காலை 9-00 மணிதொடக்கம் 2-00 மணி வரை றெலக்ஸ் இன்டஸ்றிஸ் (ROLAX INDUSTRIES) 222 A, கஸ்தூரியார் வீதி, (ராதிகா ஜுவல்லர்ஸ் மேல் மாடி) யாழ்ப்பாணம். C 2944

## தேவை

இயந்திரத்தில் வேலைசெய்ய அனுபவமுள்ள தச்சுத் தொழிலாளர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு உடன் நேரில் வரவும். வெ. தேவசீலன், குப்பிளான் சந்தி, ஏழாலை. C 2963

## பயிற்சி

ரேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங், ComputerProgramming, எலக்ரிக்கல் வயரிங், றிவைன்டிங் பயிற்சிகள் கூடியநேர செய்முறைப்பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும். சனி, ஞாயிறு கிழமை நாட்கள் காலை, மாலை நேர பயிற்சிவகுப்புக்கள் நடைபெறுகின்றன. மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்: 20-06-86. விபரங்கட்கு: Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவை அருகாமை], யாழ்ப்பாணம். C-2901

## தவறிவிட்டது

16 6-86 காலை யாழ். பஸ் நிலையத்தில் வவனியா பஸ் பெண் பிரயாணி தனது பிரயாணப்பையை இழந்துவிட்டார். கண்டெடுத்தவர் தயவு செய்து யாழ். பஸ் நிலைய அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (C 2971)

## வகுப்புகள்

புதிய இருமணித்தியால வார இறுதி Spoken English வகுப்புக்கள் வருகிற 21ம் திகதி காலை 11-30 மணிக்கு ஆரம்பமாகின்றன. ஆசிரியர் S B. Iyar 12 வைமன் வீதி, நல்லூர். [C 2910]

ஆங்கில வாசிப்பு பயிற்சி வகுப்புகள் 9ம் தரம் தொடக்கம் 12ம் தரம் வரையுள்ள பாடசாலைப் புத்தகங்கள் வாசித்து விளக்கங்கள். மூன்று மாதக்கட்டணம் - ஒருவருடப் பயிற்சி விபரத்திற்கு தொடர்பு கொள்ளவும். S. B. Iyar, இல 12, வைமன் வீதி, நல்லூர். (C 2909)

கிற்றார், வயலின், வீணை' மிருதங்க,' நடன, மனையியல்' தட்டச்சு, சுருக்கெழுத்து, அலங்கார பொருட்கள் செய்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன. விபரங்களுக்கு: மேபெ(F)யர் அக்கடமி, 108, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [C 2965]

## சேவை

புதுப்பிக்கப்பட்ட ஹொண்டா C 70, C 90 ஓடர்களுக்கு எடுத்து கொடுக்கப்படும். J. P. T. Ltd, 3 நவீன சந்தை, [மேல் மாடி] யாழ்ப்பாணம். (A 742)

தட்டச்சு இயந்திரங்கள் [Typewriters] சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும், விலைக்கும் வாங்கப்படும். Fudo Enterprises, 39/17 மின் சாரநிலைய வீதி, [3ம் ஒழுங்கை] யாழ்ப்பாணம். (C 2977)

## WANTED

Research Officer- We need a person with acadamic, or professional qualifications, proficency in English and knowledge / experience of economic development programmes, for project identification, and formulation with appropriate technology. Salary negotiable. Apply before 7-7-86: Secretary, Ootru Organisation, Mari Amman Lane, Thirunelvely, Jaffna. [C 2967]

## வாடகைக்கு

வீடுகள். அறைகள் [பாதுகாப்பான இடங்களில்] தேவையானவர்கள், கொடுக்க விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்க, T. R. என்ரபிறைசஸ் அன் மல்ரிசேவிசஸ், கட்டைப் பிராய், யாழ்ப்பாணம். [கிளை - குப்பிளான்) (C 2916]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

உடுப்பிட்டியைச் சேர்ந்த பொன்னையா குமாரசாமி மகள் பரமேஸ்வரியின் மரணசாதனமில்லாச் சொத்துவிடயமாக;

— இறந்தவர்

பொன்னையா குமாரசாமி சுந்தரலிங்கம், மணிமாளிகை, உடுப்பிட்டி.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்க வழக்கிலக்கம்: /1238 T.

எதிராக

1. குமாரசாமி சண்முகலிங்கம், மங்கையில்லம், சந்தை வீதி, உடுப்பிட்டி.
2. குமாரசாமி மகாலிங்கம் ஈஸ்வரி வாசா, மாலி சந்தை, அல்வாய்.
3. குமாரசாமி ஆனந்தராசா,
4. பெண் தவமணி, இருவரும் நகரசபை குடிமனை, திருகோணமலை.
5. சின்னத்துரை துரைராசா,
6. பெண் நகுலேஸ்வரி, இருவரும் 509, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
7. பொன்னுத்துரை தயானந்தம்,
8. பெண் மங்களேஸ்வரி, இருவரும் 24/1, மதவடி ஒழுங்கை, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

— எதிர்மனுதார்கள்

மேலே பெயர் கொண்ட மரணச்சொத்து வழக்கில் மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ம் திகதி இந்நீதிமன்றில் காலை 9-30 மணிக்கு தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதுஎன்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1986-ம் ஆண்டு தை மாதம் 29-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
சண்முகம் நடராசா
பதிவாளர்

வரைவு:
இ. இ. தாமரட்ணம்
மனுதாரரின் சட்டத்தரணி
[C-2930]

## கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 03-07-1986 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-உம், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப்பல்கலைக் கழகத்தின் நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்.

18-06-1986 (A 853)

## முதலாண்டு நினைவஞ்சலி



செல்வி அ. வில்லியம்

மாதாமடியில்
22-12-1935
ஆண்டவன் அணைப்பில்
20-06-1985

நீங்கா நினைவினில்

அன்னம்பால்
பகுத்தவாறுய்
நல்லனசேர்ந்
தறிவோடுட்டி
அன்னையாய்த்
தெரேசாள்பெண்
கள்கலைக்கூடச்
செய்களுக்காய்
அன்னமாய்ப்
பண்போடெழுத்தும்
பாகாய்த்தந்திட்ட
எம்மிறையே!
''அன்னமே'' நீர்
சென்றின்றோர்
ஆண்டுதான்
யுகம்போல் அம்மா!

''அன்னம்'' என
நாமழைத்தால்
குறிகாட்டும்
வினாவாகப்
புருவந்தன்னில்
என்னதான் குறை
யெனினும் முத்துதிரும்
கலகலப்பாய்
வதனந்தன்னில்
இன்னமும் அகலாமற்
கன்றுபிரி காராவின்
துயரனையஆசிரியர்
மனக் கமலந்தன்னில்
பொன்னெழுத்தில்
பொறிப்பதற்குச்
சொல்லேது
களஞ்சியத்தில்
உருகுகின்றோம்
மறவோம் உம்மை.

என்றும் நினைவில்நிறுத்தும்:
அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்.
யா/புனித தெரேசாள்
மகளிர் கல்லூரி,
அச்சுவேலி. C 2845

## 31-வது நினைவஞ்சலி



குமாரசாமி
சர்வானந்தன்

தாயின் மடியில்:
10-4-1964
நோயின் பிடியில்:
21-5-1986

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எங்கள் எல்லோரையும் பெருமை கொள்ளச் செய்துவிட்டு திடீரென எம்மை எல்லாம்ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்ட அன்புச் செல்வமே உனது ஆத்மா சாந்தியடைய உன்குலதெய்வமாகிய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் என்றென்றும்
துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா,
தம்பிமார், அம்மம்மா,
மாமா குடும்பத்தினர்,
உற்றார் உறவினர்கள்,
மற்றும் உற்றநண்பர்கள்,
No. 29. மணிக்கூட்டு
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
C 2978

## 31-நாள் நினைவஞ்சலி



அமரர்
க. வேலுப்பிள்ளை

[முன்னாள் வடபிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர்]

தோற்றம்: 17-02-1940
மறைவு: 21-05-1986

மாறாத அன்போடும் மட்டற்றமகிழ்வோடும் சீரோடு சிறப்பெய்தி பேரோடு புகழ்பெற்று மற்றோர் மதிக்க வாழவைத்தஎங்கள் அன்புத் தெய்வம் மறைந்து 31 நாட்கள் சென்றதையா! நீங்கள் மறைந்தாலும்உங்கள் அன்பும் பாசமும் எம்மை வழி நடத்தி செல்லும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் சிந்தனையில்
உயிர்வாழும்:

மனைவி, பிள்ளைகள்.
''குருக்கட்டு''
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
C 2863

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### தொழிற்சங்கத் தலைவர்கள் கைது:

# வெள்ளையரல்லாதோர் வேலை நிறுத்தம்!

[ஜொஹனர்ஸ் பேர்க்]

தென்னாபிரிக்காவில் நெருக்கடி நிலையின் கீழ் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் காவலில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து ஜொஹனர்ஸ் பேர்க் சிறப்பு அங்காடிகளில் வெள்ளையரல்லாத நூற்றுக் கணக்கானவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இங்கு நடைபெற்ற சில சம்பவங்களின் போது பொலிசாரால் மூன்று வெள்ளையரல்லாதோர் சுடப்பட்டு இறந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

### மீண்டும் நிராகரிப்பு

இது இவ்வாறிருக்க அங்கோலாவில் நமீபியத் துறைமுகத்தை கடந்த 5ம் திகதி தென்னாபிரிக்கா தாக்கியதை யடுத்து அதன் மீது குறிப்பிட்ட தடைகளை விதிக்குமாறு ஐ. நா வில் அணிசேரா நாடுகள் விடுத்த வேண்டுகோளை அமெரிக்காவும், பிரிட்டனும் மீண்டும் நிராகரித்து விட்டன. இந்தியா உட்பட ஆறு அணிசேரா நாடுகள் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்தது குறிப்பிடத்தக்கது [து]

## ஹெலிகாப்டர், விமான மோதல்: 25 பேர் பலி

[வாஷிங்டன்]

அமெரிக்காவில் அரிஸோனாவில் ஹெலிகொப்டர் ஒன்றுடன் இரண்டு எஞ்சின் விமானமொன்று மோதியதில் 25 பேர் வரை இறந்துள்ளதாகத் தெரியவருகிறது.

விமானத்தில் 18 பயணிகளும் 2 விமானச்சிப்பந்திகளும் இருந்ததாகவும், ஹெலிகொப்டரில் 4 பயணிகளும் பைலட் ஒருவரும் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [து]

## பஸ் விபத்து 20 மாணவர்கள் மரணம்

[லிமா, ஜூன் 18]

பெருவில் லிமாவிற்கு நூற்றைம்பது கிலோ மீட்டர் தெற்கே பெரும் பள்ளமொன்றில் பஸ் ஒன்று கவிழ்ந்து விழ்ந்ததில் இருபது பாடசாலை மாணவர்கள் இறந்துள்ளதாகவும் பதினைந்து பேர் வரையில் படுகாயமடைந்துள்ளதாகவும். தெரிவிக்கப்பட்டது. [து]

### பஞ்சாப் ஹரியானா பிரச்சினை:

## இந்திய உள்துறை அமைச்சர் பஞ்சாப் முதல்வர் சந்திப்பு

[சண்டிகார் யூன் 19]

இந்திய உள்த்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங்கும், இந்திரா காங்கிரஸ் கட்சியின் உபதலைவ திரு அர்ஜுன் சிங்கும் பஞ்சாப்முதலமைச்சர் திரு; சுர்ஜித் சிங் பர்னலாவைச் சந்தித்து பஞ்சாப், ஹரியானா பிரச்சினை சம்பந்தமாக இரண்டு மணிநேரம் பேச்சுவார்த்தை நடாத்தினர்கள்

மாநில நிதியமைச்சர் திரு பல்வன்சிங்கும் இப்பேச்சுக்களின் போது உடனிருந்தார்.

முன்னதாக திரு, பூட்டாசிங்கும், திரு. அர்ஜுன் சிங்கும் ராஜ்பவனில் ஆளுநர் திரு சித்தார்த்த சங்கரேயைச் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினர்கள்.

வெங்கட் ராமய்யா கமிஷன் அறிக்கை அமுல் படுத்துவதில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையை அகற்றும் ஒரு முயற்சியாக இந்தியப் பிரதமர் திரு, ராஜீவ் காந்தியின் உத்தரவின்படி இவர்கள் இருவரும் சண்டிகார் சென்றது குறிப்பிடத்தக்கது

வெங்கட ராமய்யா கமிஷன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி ஹரியானாவிடம் ஒப்படைக்க வேண்டிய கிராமங்களை கண்டறிய உருப்படியான யோசனைகளைத் தெரிவிக்கும்படி உள்த்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் பஞ்சாப் அரசை வேண்டியுள்ளார்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியும், காலம் சென்ற அகாலிதள் தலைவர் அர்ஜுன்சிங் லோங்கோவாலும் கையெழுத்திட்டுள்ள உடன் படிக்கையிலுள்ள சில அம்சங்களை பஞ்சாப்முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் திரு. பூட்டாசிங் சுட்டிக் காட்டியுள்ளார். [து]

## 150 பேர் காயம்

[தெஹரான்]

வளைகுடாவின் தெற்குப் பகுதியிலுள்ள தீவுகளில் ஈராக்கிய நிலைகளை தமது படைகள் தாக்கி நூற்றிஐம்பது பேரை காயப்படுத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது,

பல ஈராக்கிய அதிகாரிகளும் சிலஈராக்கிய நிலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் ஈரான் மேலும்தெரிவித்துள்ளது, [து]

## குண்டு வெடிப்பில் 8 பேர்மரணம்

[லாகூர்]

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் பிராந்தியத்தில் இவ்வாரம் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ளது.

மிகவும் அண்மையில் நடைபெற்ற குண்டு வெடிப்பு ஆப்கானிஸ்தான் எல்லைப்புறத்திலுள்ள தனியார் வெடிமருந்துக்குதமொன்றில் ஏற்பட்டது. (து]

### முப்படைத் தாக்குதல்

## ஜனாதிபதிக்கு வல்வை பிரஜைகள் குழு மகஜர்

[வல்வெட்டித்துறை]

இம்மாதம் 7-ம் திகதியிலும். 10 ம்,11 ம் திகதிகளிலும் வல்வையிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலும் இராணுவம், கடற்படை, ஆகாயப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை கண்டித்து வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அம்மகஜரில் இம்மாதம் 7 ம் திகதி மாலை நான்குமணியளவில் வல்வை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலால் ஆர். விஜயா என்னும் பணிப்பெண் இறந்ததையும், திருமதி எஸ். ஆறுமுகம் படுகாயமடைந்ததையும் சுட்டிக்காட்டி வல்வைப் பகுதியில் நிகழ்ந்த தாக்குதல்கள் பற்றி விரிவான விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;'இத்தாக்குதல்களால் ஐந்து அப்பாவி உயிர்கள் பலிகொள்ளப்பட்டன. இருபத்தாறு பேர் படுகாயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுமார் ஐம்பது பேர் வரை வெளிநோயாளர் பிரிவிலும், தனியார் வைத்திய விடுதிகளிலும் சிகிச்சைபெற்றனர் இப்பகுதிகளில் பலவீடுகள் மோசமான நிலையில் சேதமாக்கப்பட்டன

''கடற்படை, விமானத்தாக்குதல்களால் வல்வையிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ளவர்களும் காயப்பட்டார்கள். வீடுகள், பாடசாலைகள், ஆலயங்களும் சேதமாக்கப்பட்டும், தாக்கப்பட்டுமுள்ளன. ஆகாயத்தாக்குதல்களால் 'காட்டுப்புலம்' தொடக்கம் 'நெடிய காடு' வரையிலான பகுதிகளிலுள்ள பெரும்பாலான வீடுகள் யாவும் சேதமாக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. பதினேழரை மணித்தியாலயங்கள் தொடர்ச்சியாக இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன

இந்நிலையில் முப்படைகளின் பொறுப்புமிக்க சேனாதிபதி என்னும்ரீதியில் தங்களிடம் இப்படியான பாதுகாப்புப் படையினரின் செயல்களை மேலும் நீடிக்கவிடாதுதடுத்து நிறுத்துமாறு கேட்டுக்கொள்வதுடன் இப்பாரிய சேதங்களால் ஏற்பட்ட அழிவுகளை உத்தேசித்து யாழ் அரச அதிபரிடம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கும் உடனடியாக நிவாரண உதவிகளை வழங்கப் பணிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்'' எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழிவுச் சேதங்கள் பற்றிய புகைப்படங்களும் பாதிக்கப்பட்ட பிரதேச வரைபடங்களும் இம்மகஜருடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## வழக்கம்பரை திருவிழாவும் திருப்பணியும்

(யாழ்ப்பாணம்]

வழக்கம்பரை அம்மன் கோவில் திருவிழா ஜூலை மாதம் 11-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ஜூலை 20 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 21 ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்

நயினாதீவு அம்பாள் திருவிழாக் காலத்தில் வழக்கமாக நடைபெறும் இவ்வலயத் திருவிழா தம்ப மண்டபத்தில் நடைபெற்ற திருப்பணி காரணமாக பின்போடப்பட்டதென்றும் திருவிழாவைத் தொடர்ந்தும் திருப்பணி நடைபெறவிருக்கிறது என்றும் இவ்வாலய திருப்பணிச் சபை தெரிவிக்கின்றது நடைபெறவுள்ள திருப்பணிகள், திருப்பணிக்கு உதவுவதாக உறுதியளித்தவர்களின் நன்கொடையிலேயே தங்கியுள்ளதாகவும் இவ்வாலயத் திருப்பணிச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

## அடிக்கல் நாட்டுவிழா

[சுழிபுரம்]

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை கட்டடத்திற்கான அடிக்கல் வடமாநில கல்விப்பணிப்பாளர்திரு இரா. சுந்தரலிங்கத்தினால் சமயாசாரப்படி நாட்டி வைக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா. நிர்வாக அதிகாரி திரு. கா. சந்திரராசா ஆகியோர் உட்பட பெற்றார் மாணவ மாணவிகள் இவ்வைபவத்தில் பங்குபற்றினார்கள்.

### உலகக்கிண்ண உதைபந்தாட்டம்:

# இங்கிலாந்து வெற்றி டென்மார்க் தோல்வி!

## கால் இறுதி நாளை ஆரம்பம்

(மெக்ஸிக்கோ)

மெக்ஸிக்கோவில் நடைபெற்று வரும்,'உலகக்கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியின் 2-வது சுற்றுப் ஆட்டத்தில் டென்மார்க் தோல்வி அடைந்து விட்டது.

இதுவரை தோல்வி அடையாது முன்னணியில் இருந்த டென்மாக் கோஷ்டி நேற்று முன்தின ஆட்டத்தில் ஸ்பெயின் கோஷ்டியிடம் 5—1 கோல்களால் தோல்வியடைந்தது பெரும் வியப்பை ஏற்படுத்தியது.

### இங்கிலாந்து வெற்றி

இங்கிலாந்துக்கும், பரகுவேக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து 3—0 கோல்களால் வெற்றி பெற்றது.

### கால்இறுதிப் போட்டிகள்

மேற்படி சுற்றுப் போட்டியின் 'கால்இறுதி'ப் போட்டிகள் நாளை ஆரம்பமாகின்றன. இப்போட்டியில் மொத்தம் எட்டுக் கோஷ்டிகள் தெரிவாகியுள்ளன. அவற்றின் பெயர்கள் வருமாறு:

பிரேஸில், பிரான்ஸ், ஆர்ஜன்ரீனா, இங்கிலாந்து, மே. ஜெர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின், மெக்ஸிக்கோ.

நாளைய ஆட்டத்தில் இங்கிலாந்தை எதிர்த்து ஆர்ஜன்ரீனாவும், ஸ்பெயினை எதிர்த்து பெல்ஜியமும் மோதும்.

ஞாயிறு ஆட்டத்தில் பிரேஸிலை எதிர்த்து பிரான்ஸும், மெக்ஸிக்கோவை எதிர்த்து மே. ஜெர்மனியும் மோதும்.

மேற்படி போட்டியில் வெற்றிபெறும் கோஷ்டிகள் யாவும், 25-ம் திகதி நடைபெறும் 'அரைஇறுதி' ஆட்டத்தில் மோதிக்கொள்ளும். (வி)

### போயிங் 'கனிஷ்கா' விபத்து:

## அயர்லாந்தில் முதல்வருட நினைவுதின வைபவம்

[லண்டன்]

கடந்த ஆண்டு ஜூன்மாதம் அயர்லாந்துக் கடலோரத்தினருகே விழுந்து நொருங்கிய ஏயர் இந்திய ஜம்போ ஜெட் விமானம் 'கனிஷ்கா' வில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் எதிர் வரும் திங்கட்கிழமை ஐரிஷ் நாட்டுக் கடற்கரைக் கிராமம் அகஸ்தித்தாவில் நடத்தவிருக்கும் நினைவு தின நிகழ்ச்சியில் இந்தியா, கனடா, மற்றும் அயர்லாந்தின் வெளியுறவு மந்திரிகள் கலந்துகொள்வார்கள்.

இந்த விமானத்தில் பயணம் செய்த 329 பேரும்இந்த விபத்தில் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இறந்தவர்களின் உறவினர்கள் பலர் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள். [து]

## பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன

(வேலணை)

அண்மைக்காலங்களில் தீவுப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினாலும் போக்குவரத்துச் சீர்கேடுகளினாலும் கடந்த இரு வாரங்களாக தீவுப் பகுதியிலுள்ள வேலணை, புங்குடுதீவு கல்வி வட்டாரங்களில் மூடப்பட்டிருந்த பாடசாலைகளில் மண்டைதீவு, ஊர்காவற்றுறையில் உள்ள சிலபாடசாலைகளைத் தவிர மற்றும் அனைத்துப் பாடசாலைகளும் 16ந்திகதி திங்கட்கிழமைமுதல் திறக்கப்பட்டு வழமைபோல வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

பாடசாலைகள் வழமை போல் திறக்கப்பட்டாலும் மாணவர்களின் வரவு மிகக் குறைவாக வேகாணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நிச்சயமாகத் தீமை என்று தெரிந்ததைவிட நன்மையாக இருக்கக்கூடும் என்கின்ற ஒன்றையே நான் ஏற்றுக் கொள்ள விரும்புகின்றேன்.

— சாக்ரெட்டீஸ்.

# நமது நோக்கு

## இரகசியங்களும் பரகசியங்களும்

இரண்டொரு தினங்களாக யாழ் நகரில் குண்டுச் சத்தங்கள் ஓய்ந்துள்ளன. சத்தங்கள் ஓயும்போதெல்லாம் அடுத்துவரும் நாட்களில் முன்னைவிட பெரிய சத்தங்களுக்கும் தாக்குதல்களுக்கும் ஆயத்தம் நடைபெறுவதாக ஊகித்துக் கொள்வதும், அதற்கேற்றாற்போல் தம்மைத்தயார் படுத்திக்கொள்வதும் இப்பகுதி மக்களின்வழக்கமாகிவிட்டது

வடக்குக்கிழக்கில் அதிபயங்கர ராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிட்டதன்மூலம் தமிழ் மக்களை ஒடுக்கிவிடலாமென்ற எண்ணம் பிழைத்துவிட்டது ஒருபுறமும் இந்திய அரசை சர்வதேச ராஜீய கெடுபிடிகள் மூலம் நெருக்குவதற்குஎடுக்கப்பட்ட முயற்சிகள்பிழைத்துவிட்டது இன்னொருபுறமும் அரசாங்கத்தை மீண்டும் தர்மசங்கடத்துக்குள்ளாக்கியிருக்கின்றன. அரசின் உயர்ந்த தலைவர்கள் வெளியிடும் கருத்துக்களிலிருந்தே இதை புரிந்து கொள்ளலாம்.

அண்மையில் வாதுவையில் மொல்லிகொட பிரக்ஞாதேய பிரிவெனவில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தன வெளியிட்டுள்ள சில கருத்துக்கள் அரசின் இயலாமையை எடுத்துக் காட்டுகின்றன.

"இப்போதைய சூழ்நிலையில் இந்தியா எமக்கு நூறு வீதம் ஆதரவளிக்குமானால் உலகம் எம்மை ஆதரிக்கும்" என்கிறார் அவர்.

அதாவது தமிழ் மக்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள ராணுவக் கொடுங்கோன்மைக்கு இந்தியா நூறுவீதம் ஆதரவளிக்க வேண்டுமாம், இந்தியாவைப் புறக்கணித்துவிட்டு மேற்கு நாடுகளில் "மார்க்ஸிய, பிரிவினைவாத, பயங்கரவாதம்" என்ற அடிப்படையில் செய்யப்பட்ட பிரசாரம் எடுபடவில்லை. நாட்டின் அபிவிருத்திக்கென வழங்கப்படும் நிதி உதவிகள் யாவும் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்காகவே பயன்படுகிறது என்பதாக அந்நாடுகள் வெளிப்படையாகவே கூறி உதவிகளை நிறுத்த முற்படுவதாக சிரேஷ்ட அமைச்சர்களே கூறிவருகின்றார்கள்.

இந்நிலையில்தான் ஜனாதிபதியின் ஆதங்கம் வெளிப்படுகின்றது

"இந்தியா சக்திமிக்க ஒரு நாடு. அதற்கு பெரிய சந்தைவாய்ப்புண்டு. உலகம் எம்மைவிட இந்தியாவின் குரலுக்கே அதிகமாக செவிமடுக்கின்றது" இன்னும் சொல்கின்றார்:-

"பெரும்பான்மை சமூகம் சிறுபான்மை சமூகத்தை அழித்தொழிக்க முற்படுகிறது என்ற அபிப்பிராயம் உலகம் முழுவதிலும் பரப்பப்பட்டுள்ளது. 1983-ம் ஆண்டு கலவரத்துக்குப்பின்தான் இந்தநிலை ஏற்பட்டது"

1983-ம் ஆண்டுக் கலவரத்தின் பின்னர் இனப்பிரச்னை தீர்வுக்கென இந்திய அரசு எடுத்துக் கொண்ட நல்லெண்ண முயற்சிகளை உலகம் அறியாமலில்லை. அந்த முயற்சிகள் பலனளித்து இங்கே இரு சமூகங்களும் சௌஜன்யமாக வாழ்வதற்கான சூழ்நிலை உருவாகும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கை அரசியலாரின் சிந்தனையில் ஒரு திருப்புமுனை ஏற்படலாம் என்றும் கருதப்பட்டது. ஆனால் நடந்ததென்ன?

அமைதிமுயற்சிகளை ஒரு மறைப்புக் குடையாகப் பாவித்துக் கொண்டு இராணுவ கெடுபிடியின் மூலம் தமிழர் மீது தன் சொந்த நோக்கங்களை திணிக்க எத்தனிக்கப்பட்டமை பரமரகசியம். மிகுந்த பிரயாசையுடன் உருவாக்கப்பட்ட போர்நிறுத்தக் காலத்தையும்கூட போர் ஆயத்த முயற்சிகளுக்கே பயன்படுத்தப்பட்டமையை ஜனாதிபதியே பத்திரிகை நேர்முகம் ஒன்றில் ஒப்புக் கொண்டார்.

இந்நிலையில், இப்போது மீண்டும் பலகட்சி மாநாடு என்றும், இனப்பிரச்னை தீர்வுக்கான புதியயோசனைகள் என்றும் தொடர்பு சாதனங்களில் பெரிதாகப் பிரசாரம் செய்யப்படுகின்றது. இவைபற்றி இந்திய அரசுக்கும் விளக்கப்படுத்தப்பட்டுள்ளதாம். இந்திய பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ள விளக்கங்களில் இரகசிய விடையங்களும் இருப்பதாகக்கூறப்படுகின்றது. அவை பூரணமாக வெளிவராதநிலையில் ஹேஷ்ங்கள் கூறுவதில் அர்த்தமில்லை.

சிந்தனைத் தெளிவுள்ள தமிழ் மக்கள் மீது நியாயமற்ற எந்த ஒரு தீர்வையும் திணிக்கமுற்படுவது வெற்றியளிக்கமாட்டாது என்பதை மட்டும் கூறிவைக்கலாம்.

## கண்காட்சி

(மாவிட்டபுரம்)

மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான பொருட்களைக்கொண்ட கல்விக் கண்காட்சி ஒன்று வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் இன்று இடம்பெறுகிறது.

மேற்படி வித்தியாலய மாணவர்கள் சிறந்தமுறையில் தயாரித்துள்ள பல்வேறு அம்சங்களைக்கொண்ட பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும்,

# "பதவிகளையோ அல்லது எதையும் எதிர்பார்த்து போராட்டம் நடத்தவில்லை

# நாங்கள்போராடுவதைசரித்திர கடமையாகக் கருதுகிறோம்"

### ஜூனியர் விகடனுக்கு 'பிரபா' பேட்டி

(நேற்றைய தொடர்ச்சி)

"இலங்கையில் தமிழனாகப் பிறந்ததால் வாழும் நிலம் பறிக்கப்பட்டது, கல்வி பறிக்கப்பட்டதுபொருளாதார வசதிகள் மறுக்கப்பட்டன, இதை எதிர்த்துப் போராடாவிட்டால்ஜடம்தான் பிறகு ஒருமனிதனுக வாழ்வதில் அர்த்தமில்லை நாங்கள் போராடுவது சரித்திரக் கடமையாக கருதுகிறோம் பதவிகளையோ அல்லது எதையும் எதிர்பார்த்தோ போராட்டம்நடத்தவில்லை."

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் திரு வே பிரபாகரன் சென்னையிலிருந்து வெளியாகும் ஜூனியர்விகடனுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அப்பேட்டி வருமாறு:

தமிழர்கள் பெருவாரியாக வாழும் யாழ்ப்பாணம் மீது ஜெயவர்த்தனவின் விமானங்கள் வெறித்தனமாகக் குண்டுகளை விச... சிங்களர் படை நகருக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தக் கிளம்பி விட்டது என்னும் செய்தி நம்மை பதைபதைக்கச் செய்தது.

இதைத்தொடர்ந்து விடுதலைப்புலிகள் நிகழ்த்திய வீராவேசமான எதிர்த்தாக்குதலை சாமாளிக்க முடியாமல்சிங்கள ராணுவம் திணறிப் போய் பின்வாங்குகிறது என்னும் செய்தி சற்று நிம்மதியைத் தருகிறது.

இருப்பினும்... விடுதலைப் புலிகளால் சகல வசதிகளோடு கூடிய சிங்கள ராணுவத்தை தொடர்ந்து சமாளிகக முடியுமா?... சிங்கள ஓநாய்கள் ஒருவேளை உள்ளே புகுந்து விட்டால் அப்பாவித் தமிழ் மக்களின் கதிஎன்னவாகும்...? இதுபோன்ற கவலைகள் வேறு மனதை நெருடியது—

உண்மையில் அங்கு தற்போது நிலைமை எப்படி இருக்கிறது? இதுபற்றி யார்நேரடியாக நமக்கு தகவல் சொல்வார்கள்...?

திடீரென்று விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் சென்னைக்கு வந்திருக்கும் தகவல் கிடைத்தது. (அவர் சென்னையில் இருக்கிறாரா, இலங்கையில் இருக்கிறாரா என்பதெல்லாம் ரகசியமாக வைக்கப்படுவதால் நினைத்தபோது சந்தித்துவிட முடியாத நிலை!) சென்னைக்கு வந்திருக்கும் தகவல் கிடைத்ததும் தொடர்பு கொண்டோம். மறுநாள் காலை சந்திக்கலாமென்று தகவல் வந்தது. கூடவே நாங்கள் வந்து அழைத்துப்போவோம் என்று சொல்லியனுப்பினர்கள்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு இரும்பை ஒத்தஉடல்வாகு கொண்ட மூன்று இளைஞர்களுடன் ஒருவேன் நம் அலுவலகத்துக்கு வந்து நிற்க ஏறி அமர்ந்தோம்.

சும்மா சொல்லக்கூடாது இளம் புலிகள் சென்னை வீதிகளில் பீக் அவரின் கூட படுலாகவமாக வேனை ஓட்டுகிறார்கள்!

சென்னை இந்திரா நகரில் உள்ள தமிழ ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமையகம்... தேதி மே 21 காலை. மணி 9-30.

வீட்டைச் சுற்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இளைஞர்கள்... உள்ளே மாடிக் ஹாலில்...

"தம்பி" என்று செல்லமாக அழைக்கப்படும் அவர்கள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இருக்கிறார்.

சற்று பருமனான ஆனால் வலுவான உடல்வாகு. ரொம்ப உயரமில்லை உச்சி இல்லாமல் மொத்தமாக தூக்கிவாரப்பட்ட சீரான தலைமுடி... தீர்க்கமாக கச்சிதமான மீசை பிரபாகரனுக்குத் தனிக் கம்பீரத்தைத் தருகிறது.

நாம் அங்கே சந்தித்தபோது ஈழத்திலிருந்து வந்து கொண்டிருந்த செய்திகளை அவருடைய தோழர்கள் டைப் அடித்து அவரிடம் காட்டிக் கொண்டிருந்தனர். பிரபாகரன் அவற்றைக் கூர்ந்து படித்து விட்டுச் சில செய்திகளை ஓகே செய்தார். அவை வெளியுலகம் அறிய பத்திரிகைகளுக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டன.

வல்வெட்டித்துறையில் இலங்கை ராணுவம் விமானமூலம் குண்டுவீசியசெய்தி அப்போது வந்தது வீராவேசமாக எதிர் தாக்குதல் நடத்தியதில் எட்டு விடுதலைப் புலிகள் பலியாகினார்கள்.

இந்தச் செய்தியை பிரபாகரன் நம்மிடம் படித்துக் காட்டிவிட்டுச் சற்று மௌனமானார்.

இலங்கை ராணுவம் மே 17 ம் திகதி யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் தொடங்கியது மே 17 ம் திகதியிலிருந்து தாக்குதல் நடத்தப்போகிறது என்பதை 15 ம் திகதியன்றே நோட்டீஸ் அடித்து மக்களை ஒரு உள்நாட்டு யுத்தத்திற்கு தயார் செய்திருக்கிறது விடுதலைப் புலிகள் இயக்கம்.

இணைப்புப் பாலங்கள் உடைக்கப்பட்டன. ஏராளமான மரங்கள் வெட்டி சாலைகளின் குறுக்கே போடப்பட்டன கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன, சாலைகள் வழியே ராணுவம் நகரமுடியாமல் தடுக்கப்பட்ட நேரத்தில் கடல் வழியே ஆயுத 'சப்ளை'கள் வராமல் கடற்கரை ஓரங்களில் அணிவகுத்து ராக்கெட்டுகள், இயந்திர துப்பாக்கிகளுடன்தாக்குதல்துவங்கினோம். முற்றுகை நீடித்து மக்களை பட்டினி போடும் முயற்சி நடந்தால்?... என்று கேட்டோம்.

"அதெல்லாம் நடக்காது. எங்கள் இயக்கத்தில் பல பிரிவுகள் உள்ளன. அதில் ஒரு பிரிவு தமிழ்ஈழப் பகுதியில் உணவு விஷயத்தில் சுயதேவை பூர்த்திக்குக் கவனம் செலுத்தியது புரோட்டீன் சத்துள்ள தானிய வகைகள் கிழங்கு வகைகளையெல்லாம் பயிரிடச் செய்திருக்கிறோம். அது தவிர உணவு கடத்திவர எங்களுக்கு ரகசிய பாதைகள் உள்ளன" என்றார் உறுதியான குரலில்.

இலங்கை ராணுவத்தினரின் "பயங்கரமான யாழ்ப்பாண முற்றுகை" கடைசியில் பிசுபிசுத்துப் போய்விட்டது "மூன்று நாள் ஆபரேஷன் திட்டம் அது. அதற்குரிய சப்ளை முடிந்து விட்டது. ராணுவ அதிகாரி தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டார். அத்துலத்முதலி தோல்விக்குச் சப்பைக்கட்டு கட்டுகிறார்" என்றார் பிரபாகரன்.

யாழ்ப்பாணத்தில் மக்களின் முழு ஆதரவோடு விடுதலைப் புலிகள் ஆட்சிதான் நடக்கிறது என்றார் புன்முறுவலுடன் பிரபாகரன்.

"யாழ்ப்பாணத்துக்கு நீங்கள் எப்போது போய் வந்தீர்கள்?" என்று கேட்டபோது பதில்சொல்ல வந்தபிறகு ஒரு கணம் தயங்கி ஒரு சிறு புன்னகையுடன் "இடையிடையே போய்வருவேன்" யுத்தமுனையில் எதுவும் எனது உத்தரவுகள் படியே நடக்கும். அவசர முடிவுகள் எடுக்க அங்கே உள்ள எனது தளபதிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லோரும் நான் எப்படிச் சிந்திப்பேனோ அப்படி சிந்தி சிந்திக்கப் பயிற்சி பெற்றவர்கள்!" என்றார்.

வேறு எந்த கெரில்லா படைகளுக்கும் இல்லாத

(7ம் பக்கம் பார்க்க)

## கலியுகக்கடவுளே கந்தவனக்கந்தனே

அலைபாயும் கடலோரம் அழகாய் அமர்ந்தவனே!
அருட் குருவாய் முதிர்ந்த குகனே!
நலிவுறவோ நற்றமிழர் நகையிழந்தே அயல் புகவோ?
நடமாடமுடியாது குழிபுகவோ?
பொலிவிழந்தே பூவையரும் பூஞ்சிறாரும் பொங்கியழவோ?
பொம்பருடன் ஹெலி போர்ப்பீரங்கி
வலிவுகொண்டழிக்கின்றார் வகையின்றித் தொகையின்றி
வரன் முறைகள் நெறிமுறைகள் எதுவுமின்றி
கலியுகக் கடவுளே! கந்தவனக் கந்தனே காராயோ
எம்மை? வாராயோ தேரேறி!

— பொலிகை செ. சின்னையா

**பொலிகண்டி கந்தவனக் கந்தன் ஆல தேர் இன்று**

## கந்தா உன்னடி பணிந்தோம்!

மண்ணிலே மாந்தரெலாம் கண்கலங்கி வாழ்ந்திடுதல்
கண்ணிலே வற்றாத நீர் படைத்தாய் என்பதாலோ!
கவியிலே இன்பமின்றித் துன்பமே தென்படுதல்
புவியிலே மாந்தரின் தீச்செயல் மிகுந்ததாலோ!
புண்ணியங்கள் வலுவிழந்து பாவங்கள் வலுத்ததால்
கண்மூடி இவைபார்க்க கந்தனே மறுக்கிறாயோ!
தேரிலே பவனிவரும் கந்தா உன்னடி பணிந்தோம்
காரிருள் நீக்கி எமைக் காத்திட மாட்டாயோ!

— மானிப்பாய் ச நிரஞ்சன

**நவாலி அட்டகிரி ஸ்ரீ கந்தசாமி இரத உற்சவம் இன்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்- ஆனி
திகதி- 7(1986-6-20)
கிழமை- வெள்ளி
திதி- சதுர்த்தசி பி ப. வரை
நட்சத்திரம்- கேட்டை மு.இ வரை

மேடம்: அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம், ஆத்திரம் வழக்கு விவகாரங்களில் மாட்டிவைக்கும் அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித் தரும்

இடபம்: பூமியால் அதிக இலாபம் கிடைக்கும், விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல மாறுதல் ஏற்படும். மணமக்கள் வாழ்க்கையில் நன்மையான மாற்றங்கள் உண்டு

மிதுனம்; எதிலும் அவசரப் போக்கை கடைப்பிடிப்பீர்கள் தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக்கூடும். பெரியவர் ஒருவருடன் மோதலும் ஏற்படும்,

கடகம்; வாழ்வில் வெற்றித் திருநாளாம். எதிலும் அதிர்ஷடம் உங்கள் பக்கம் இருக்கும் புதிய பொருட்கள் கொள்வனவு செய்ய நன்று

சிங்கம்: மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கக்கூடும் பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பத்தில் உறவு நெருங்கியதாக இருக்கும்.

கன்னி: ஆமை வேகத்தில் காரியங்கள் நடக்கும். பகையாளர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும் காணித் தொல்லையினால் கடன்பட நேரிடலாம்.

துலாம்; பசுமையான சம்பவங்கள் நடைபெறும். களஸ் திரவழியால் நன்மையுண்டு, காதல்வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனி[illegible]ன தினம்.

விருச்சிகம்: அடுத்துக்கெடுப்பதற்கு சிலர்முனைவர். நண்பர்களாலும் தொல்லைகளுண்டு இன்று திட்டமிட்டுச் செயற்படவும்.

தனுசு: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர் பூமிப் பிணக்கிற்குமிடமுண்டு

மகரம்: எதிலும் அவசரக் கோலம் தென்படும் சகோதர வழியல் சஞ்சலத்திற்குமிடமுண்டு இளமை நினைவுகள் வேதனை தரலாம்

கும்பம: வாகனம் செலுத்துவார் இன்று அவதானம் வேண்டும் தாய்வழித் தனவரவிற்குமிடமுண்டு கல்வித் துறையில் புதிய உற்சாகம் உண்டு

மீனம்: குருவின் ஆசியுடன் குறிக்கோள் வெற்றி காண்பதற்கிடமுண்டு நேர்முகப் பரீட்சை வெற்றியைத் தேடித் தரும். இரக்க சிந்தை மேலிடும்.

**திருமலை ரவீந்திரன்**

## பொருட்காட்சி

(உடுவில்)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை மாணவர்களின் கல்விப் பொருட்காட்சி இம்மாதம் 23ம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளது

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ் தனஞ்செயன் இப்பொருட் காட்சியை ஆரம்பித்துவைப்பார்.

## கோரிக்கை

(வல்வெட்டித்துறை)

கடந்த 10ந் திகதி முதல் வல்வெட்டித்துறையில் நடைபெற்று வரும் முப்படைத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட குடிபெயர்ந்து நாடிச் சென்ற பொது மக்களுக்கு அரச நிறுவனங்கள், பணிமனைகள் மூலம் உதவிகள் வழங்குமாறு உடுபிட்டி பிரஜைகள் குழு யாழ் அரச அதிபரை கேட்டுள்ளது.

வல்வைப் பகுதி மக்கள் மட்டுமன்றி ' கம்பர்மலை, கெருடாவில், இமையாணன், வல்வெட்டி, கொம்மந்தறை, உடுபபிட்டி போன்ற பகுதிகளிலுள்ள மக்களும் இத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் தங்கள் சொந்தத் தொழில்களை வேலை வாய்ப்புக்களை இழந்துள்ள இவர்களுக்கு உடனடியாக வேண்டிய உதவிகளை வழங்குமாறு அவ் அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

## நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை மேற்பார்வையாளராகதிரு ஜோசாப்இம்மானுவல் கடந்த மாதம் 15-ம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுமார்20ஆண்டுகளாகயாழ் அரசினர் வைத்தியசாலையில் ஆண் பரிசாரகராக கடமையாற்றிய திரு. இம்மானுவேல் வைத்தியசாலை ஊழியர் கூட்டுறவு நல விருத்திச் சங்கத்தின் செயலாளராகவும், ஸ்ரீலங்கா மக்கள் குடியரசு சுகாதார சேவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட பிரதிநிதியாகவும் சேவையாற்றி வருகின்றார்.

# "வித்துவான் சுப்பையாவின் மறைவு பெரும் இழப்பு"

(மாவிட்டபுரம்)

"சைவ தமிழ் வளர்ச்சிக்காக அயராது உழைத்த வித்துவான் ப சுப்பையாவின் மறைவு பெரும் இழப்பாகும் கல்வித் துறையில் அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளையும் நாம் மறந்துவிட முடியாது"

இவ்வாறு பிரபல கல்விமானும், பொதுநல சேவையாளருமான வித்துவான் ப.சுப்பையாவின் மறைவு குறித்த அஞ்சலிக்கூட்டத்தில் பேசிய காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞான சுந்தரம் கூறினர்.

அன்னாரின் மாவிட்டபுரத்திலுள்ள இல்லத்தில் இக் கூட்டம் நடைபெற்றசமயம் வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு மு சிவராசா பேசுகையில்," ஒரு துறையில் மட்டுமன்றி பல துறைகளிலும் பணிபுரிந்த வித்துவான் சுப்பையா சமஸ்கிருதம், சோதிடம் ஆகியவற்றிலும் தேர்ச்சி பெற்று சிறந்தபல மாணக்கர்களை உருவாக்கித் தந்துள்ளார். அவரது பணிகளை நாம் மறக்க முடியாது என்றார்

மற்றும் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூ அதிபர் திரு பாலசிங்கம், மயிலிட்டி கலைமகள் வித்தியாலய அதிபர் திரு சி. அப்புத்துரை ஆசிரியர் நா கருணைநந்தசிவம் உட்படப் பலர்அஞ்சலி உரையாற்றினர்கள்

பழை கூத்தியவத்தைகிராம அபிவிருத்திச் சங்கம்,சனசமூக நிலையம ஆகியன அஞ்சலிப் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டிருந்தன.

# தேரேறிவருகின்றான்

இராகம் - கானடா தாளம் - ரூபகம்

பல்லவி

தேரேறி வருகின்றான் திருவீதியில் — இன்று
சூர சங்காரன் — இன்று [தேரேறி]

அ பல்லவி

கடலோசை தனையணைத்து காக்கும் பொலிகை தனில்
இடரின்றி வாழவைத்த இன்பமுருகன் — இன்று
[தேரேறி]

சரணம்

உன்னையே வேண்டி நின்றேன் உளமார நான் என்றும்
உன்னை நினைந்திடவே உளம்தனைத் தந்திடைய்யா
என்னையும் நீ பாட எழில் பெரு தமிழதனை
அன்னையைப் போல வென்றும் அரவணைத்திருந்திடைய்யா
[தேரேறி]

பிஞ்சு முகத்தவனே பேர்பொலி கந்தவேளே
நெஞ்சு பெறுக்குதில்லை நேர்மையும் வெல்லுதில்லை
அஞ்சுதலை யறுத்து ஆறுதலைத் தந்து
வெஞ்சமரில் எமக்கு வெற்றிதனைத் தந்திடய்யா
[தேரேறி]

– "அல்வையூர் மருதன்"

# வருவாள் அம்பாள் தேரேறி

வண்ணை வீர மாகாளி
வருவாள் சித்திரத் தேரேறி
எண்ணில் பக்தர் பலர் கூடி
இழுப்பார் தேர்வடம் திருவீதி

அம்பாள் நேரில் அமர்ந்திருந்து
அள்ளிச் சொரிவாள பெருங்கருணை
இம்பர் வாழும் எமக் கெல்லாம்
இன்னல் துடைக்குந் திருநாளே.

– "சேந்தன்"

**இன்று வீரமாகாளி அம்பாள் தேர்**

## பொங்கல் விழா

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் கோணப்புல ஞான வைரவர் ஆலய பொங்கல் விழா இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனை நடைபெறும்.

## மயிலங்காட்டில் கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

மயிலங்காடு கலா ார மன்றம் இம்மாதம் 28ம் திகதி மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாசாலையில் கலாசாரவிழா வொன்றை நடத்தவுள்ளனர்.

இவ்விழாவில் திரு. வளவை வளவன் தலைமையில் "இனியொரு விதி செய்வோம்" என்ற தலைப்பில் கவியரங்கொன்று நடைபெறவுள்ளது இக்கவியரங்கில் கவிஞர்கள் உ. சேரன், தேவிபரமலிங்கம், மாத்தளை இராஜலிங்கம் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

கைதடி சரஸ்வதி சன சமூக நிலைய கலாசார குழுவினால் தயாரிக்கபட்டுள்ள 'இந்த மண்ணும் மக்களும்' என்ற [illegible] நிகழ்வு சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெறவுள்ளது


## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்ல விரும்புபவர்களுக்கும் மத்திய கிழக்கில் சாரதிகளாக, பணிப்பெண்களாகத் தொழில்புரிய செல்பவர்களுக்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு: மல்ரி சேவிசஸ்,
37, 351, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் தியேட்டர் சந்திக்கருகில்),
யாழ்ப்பாணம். [C-2976]

கட்டடத் தொழில்நுட்பவியல் நிறுவனம்
136, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Diploma in Draughtsmanship
Diploma in Quantity Surveying
(CITY and GUILDS LONDON EXAM JUNE 1987)

ஆரம்பம்:- 21 06 86
காலை 10–30 மணி
[C-2964]

## உடன் தேவை

**லிகிதர்**

கட்டிட வேலை, அரசாங்க ஒப்பந்தப் படிவங்களில் அனுபவமுள்ளவரும்
தட்டெழுத்துக்களில் தேர்ச்சி பெற்றவரும்
40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

**தட்டெழுத்தாளர்**

தமிழ், ஆங்கில தட்டெழுத்தில் நன்கு அனுபவமுள்ளவர் தேவை.

விண்ணப்ப முடிவு திகதி: 27-6-86
தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
வடமாகாண
அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்,
32, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(C 2960)

## அரிய சந்தர்ப்பம்

புதிய பதிவாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ்
உள்ளூரிலும் வெளியூரிலும்
வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு ஏற்றவாறு
யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின்
அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கமைய
பின்வரும் பாடநெறிகளுக்கான
பகுதிநேரப் பயிற்சியும், போதனையும்
2-7-1986 புதன்கிழமை ஆரம்பமாகும்.

1. மோட்டார் மெக்கானிசம் (Motor Mechanism) 6 மாத கால பயிற்சி
2. கடைச்சல் யந்திர இயக்குநர் (Lathe Operator)
3. எலெரிக் வெல்டிங் (Arc Welding)
4. வீட்டு மின் இணைப்பு (Electrical House Wiring)

(2–4: 3 மாத கால பயிற்சி)

5. QUANTITY SURVEYING PARTS I and II — 6 Months
6. DIPLOMA in HOTEL MANAGEMENT — 3 Months
7. FRENCH and GERMAN LANGUAGES TAUGHT TO READ, WRITE and SPEAK (Week days and weekend Classas) — 2 Months

Details from: REGISTRAR,
PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,
59, ST. PATRICK'S COLLEGE ROAD, JAFFNA.
(A 740)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அப்பாவி மக்கள் படுகொலை

# விடுதலை வெகுதூரத்திலில்லை என்பதை காட்டுகிறது"

[பண்டத்தரிப்பு]

''விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்ற வடவியட்நாம், இந்தியா போன்றநாடுகளில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்ட சம்பவங்கள் அந்நாடுகளுக்கு விரைவில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது எமது தமிழ்ப் பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள் கைதொகையின்றி ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்படுவது எமது சுதந்திரமும், விடுதலையும் வெகு தூரத்தில் இல்லை என்பதை எ த்துக் கா' டுவதாக அமைகிறது.'' இவ்வாறு மண்டைதீவுக் கடலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும்முகமாக பண்டத்தரிப்பு சந்தை மைதானத்தில் கடந்த ஞாயிறு பிற்பகல் நடாத்தப்பட்ட அஞ்சலிப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு ஜி. ஜெ குமார் அடிகள் குறிப்பிட்டார் பண்டத் ரிப்பு மக்கள் அவையினால் ஒழுங்கு செயப்பட்ட இக்கூட்டத்திற்கு அவையின் தலைவர் திரு. அ வ தூ யப்பா தலைமை தாங்கினார். வைத்திய கலாநிதி எம்.டி. பாக்கிய சோதி இக்கூட்டத்தில் உரையாற்றுகையில் நாட்டின் இனப் பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்ப்பதற்கு அரசு முயற்சித்து வருகின்றது என்றும், அப்பாவிகளான தமிழ் மக்கள் காட்டுமிராண்டித் தனமான முறையில் கொலை செய்யப்படும் சம்பவங்களை இனியும் தொடரவிடாது தடுக்க தமிழினம் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ஆ ஜேசுதாசன், பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலைய அதிபர் அன்னை யூலாலி, பண்டத்தரிப்பு மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி ரூபி ஜேசுதாசன், பண்டத்தரிப்பு மீனவர் சங்கத் தலைவர் திரு எஸ். மரியதாஸ், அன்னையர் முன்னணியைச் சேர்ந்த திருமதி லற்றீசியா ஜேசுதாசன், ஐசிந்தா வித்தியாலய உதவி அதிபர் திரு. சாமுவெல் பெனடிக்ற், டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார் ஆகியோருட்பட மற்றும்பலர் அனுதாபஉரை நிகழ்த்தினார்கள். திரு. எஸ் ஏ. செபரத்தினம் நன்றியுரை நிகழ்த்தினார்.

## 'உடல் உறுதியாயிருந்தால் எத்தொழிலையும் செய்யலாம்'

(யாழ்ப்பாணம்)

''எமது உடல் உறுதியாக இருந்தால் நாம் எத்தொழிலையும் செய்ய முடியும் உடல் உறுதியாக இருப்பதற்கு நாம் சுகாதார பழக்க வழக்கங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில் கைதடி மக்களிடையே சுகாதார பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்தியவர் திரு.குணரத்தினம் என்றால்மிகையல்ல'' என்று கைதடி பொது சுகாதாரப்பரிசோதகராக கடமையாற்றி பிராந்திய சுகாதார பரிசோதகராக பதவி உயர்வு பெற்றுச்சென்ற குணரத்தினத்திற்கு கைதடி ஆரம்ப சுகாதார நிலையத்தினால் நடத்தப்பட்ட பிரியாவிடை விருந்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய திருமதி எஸ். வேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

'திரு குணரத்தினம்போன்ற சுகாதார அதிகாரிகள் இருப்பதினால் தான் எமது கிராமங்கள் சுகாதாரத்தில் முன்னிற்பதுடன் அங்குள்ளவர்கள் நோய் நொடியற்றவர்களாகவும் வாழ்கிறார்கள்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதிபர். நா. கந்தையா, எஸ். தங்கராசா, டாக்டர் சபாந தன், டாக்டர் நல்லநாதன் போன்றோர் திரு.குணரத்தினத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

(ஐ)

## பெண்கள் தொண்டர் சபை 6வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை ஆறுவது ஆண்டு விழா எதிர்வரும் 22ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தலைமையில் ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (பி)

## "காலத்தாலழியாத கற்கோவில்கள் இந்துக் கலை கலாசாரத்தின் பண்பாட்டுக் கருவூலங்கள்"

(புலோலி)

''இந்துதர்மத்தின்பண்பாட்டுக் கருவூலங்களாக கோவில்களும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைகளும் அமைந்து சிறப்புறுகின்றன. இந்துக்கலை, கலாசாரம், வாழ்வியல் நாகரிகம் யாவுக்கும் கோவில்களே நிலைக்களங்களாகும். சைவம், வைணவம், சாக்தம், ஆகிய மதப்பிரிவுகள் விநாயகப் பெருமானைப் பேணி கோவில்கள் அமைத்து வழிபடுகின்றன இந்தவகையினைத்தெளிவுபடுத்துவதே வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் அதனையடுத்து அமைந்துள்ள குருக்கட்டுச் சித்திவிநாயகர் ஆலயமுமாகும்'' என்று வல்லிபுரக்குறிச்சி 'குருக்கட்டுச் சித்திவிநாயகர் திருவந்தாதி' நூல் வெளியீட்டு விழாவில் நூல் ஆய்வுரை நிகழ்த்திய முருகவே. பரமநாதன் தமது உரையில் குறிப்பிட்டார்.

பாவலர் கு. பெரியதம்பியால் பாடப்பட்ட இத்திருவந்தாதி நூலை புலோலி வல்லிபுரம் ந்து கல்வி கலாச்சார மன்றத்தின் சார்பில் அமரர் ஆ. கிருஷ்ணபிள்ளையின் நினைவாக வெளியிடப்பட்டது. இவ் வைபவத்திற்கு ஆசிரியர் க. மயில்வாகனம் தலைமை தாங்கினார். தொடர்ந்து தமது நூல் ஆய்வுரையில் முருகவே. பரமநாதன் கூறியதாவது:-

''ஆண்டவனுக்குக் கற்கோவில்கள் அமைத்துத் திருப்பணிகள் நிறைவேற்றியது போன்று சொற்கோவில்களாக அமைந்தனவே திருமுறைகளும், திவ்வியப்பிரபந்தங்களும், புராணங்களும் மற்றும் பக்திமரபு கூறும் சிற்றிலக்கியங்களும். இந்தவகையில் பாவலர் பெரியதம்பி ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தைப் பேணி பக்திச்சுவையும் பதிகச் சுவையும் இறையன்மையும் ஒருங்கமைய குருக்கட்டு சித்தி விநாயகர் மீது பாடிய திருவந்தாதி நூல் தலச்சிறப்பு, பக்தி அனுபவம். இலக்கிய மரபுகளை உள்ளடக்கிய சமரச நிலைப்பாடல்களாகும்.''

## கருத்தரங்கு

(வேலணை)

யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி வகுப்பொன்று எதிர்வரும் 20ம் திகதி வெள்ளிக்கிழமைமுதல் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையிலான மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் காரியாலய கல்வி அதிகாரி திரு. எஸ். கந்தசாமி ஆகியோர் உட்பட பல அதிகாரிகள் கலந்துகொள்வார்கள்.

## நூலக வாரம்

[யாழ்ப்பாணம்]

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் நூலக வாரத்தை முன்னிட்டு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களைச் சேகரிக்கும் பணியில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 12 ந் திகதி றெலிகுளோப் அதிபர் திரு. எஸ். சிவராசா மேற்படி வித்தியாலய அதிபர் திரு. எம். இராமலிங்கம் தலைமையில் நூலகவாரத்தை ஆரம்பித்து வைத்தார். நூலகவாரம் இரண்டு வாரத்துக்கு நடைபெறும்.


பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜேர்மனி
பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

பிரான்ஸ், ஜேர்மனி, கனடா செல்வதற்கு முற்பணம் செலுத்தியவர்கள் இம்மாதம் 25ந் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 729]



பிரயாண ஒழுங்குகள்

கனடா ★ டென்மார்க் ★ சவூதி அரேபியா

1. கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.
2. சவூதி அரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர்களுக்கான பிரயாண ஒழுங்கு உடன் செய்து கொடுக்கப்படும்.
3. செல்ல விரும்புவோர் யூன் 25-ந் திகதிக்கு முன்பாக கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
4. எமது பிரயாண முகவர் கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு உங்களை உடன் அழைத்துச் செல்வார்.

தொடர்பு:
N.BALA, திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
பிற் குறிப்பு:- (764 பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை) C2920.



பவர்ஸ் உரம்
வெல்லமுடியாதது

ரூபா 2,000/- க்கும் மேல்

பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி கண்மணி விசுவலிங்கம்
(நயினாதீவு—இணுவில்)

தோற்றம்: 04-09-1924
மறைவு: 21-05-1986

பாலூட்டி வளர்த்த
எம்மை
பரிதவிக்கவிட்டுவிட்டாய்
கண்ணிமைக்கும்
நேரத்தில் காலதேவன்
கவர்ந்துவிட்டானம்மா
சின்னராசாவை இழந்து
இன்னும்
ஆறுதல் அடையவில்லை
உங்களையும் இழந்து
விட்டோம்
அடுக்கடுக்காய் இழவுவந்து
ஆதரிப்பார் எவருமின்றி
நடைப்பிணமாகிஇப்போ
நட்டாற்றில் விடப்பட்-
டோம்
எம்மை வாழவைத்த
தெய்வமே!
எம்மை விட்டுப்
பிரிந்தாலும்
உங்கள் நினைவு
எம்மை விட்டு
அகலா.

குறிப்பு:-
23-05-86 அன்று நடைபெற்ற ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும், அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தும், 20-06-86 அன்று (வெள்ளிக்கிழமை) இணுவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள்,
மைத்துனிமார்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

''காந்தா வாசம்'',
இணுவில் மேற்கு,
இணுவில்.

[C-2949]

## உதைபந்தாட்டம்: 'பொற்பதி' வெற்றி

[யாழ்ப்பாணம்]

ரம்ழான் பெருநாளை முன்னிட்டு யாழ். ஒஸ்மானியாகல்லூரி மைதானத்தில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.முஸ்லிம் பிரன்ஸ் கழகத்தை எதிர்த்து விளையாடிய கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் 2 கோல்கள் போட்டு வெற்றிபெற்றது.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற யாழ்.முஸ்லிம்லீக் ஊரெழு றோயல் கழகங்களிற்கிடையிலான போட்டியில் ஊரெழு றோயல் கழகம் பெனல்ட்டி போட்டு வெற்றியீட்டியது.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் வீரப்பு வைத்திலிங்கம்
(இளைப்பாறிய கலால் உத்தியோகஸ்தர்)

மலர்வு: 07-04-1916
உதிர்வு: 20-06-1985
திதி: 09-07-1986

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக இருந்து எங்களை எல்லாம் வாழவைத்த தெய்வமாகிய உங்களை காலன் எங்களிடமிருந்து கவர்ந்து சென்று ஓராண்டு முடிந்ததுவே. இன்னும் பல ஆண்டு சென்றாலும் எங்கள் இதயங்களிலிருந்து உங்களைப் பிரிக்க முடியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல 'கற்கரை'க் கற்பக விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குப்பிழான்,
ஏழாலை.
20-06-1986 C 2966

# "உங்கள் உதவி அரச பயங்கரவாதத்துக்கே உரமாகிறது"

## வெளிநாட்டுத்தூதுவர்களுக்கு 'புலிகள்' விடுத்துள்ள அறிக்கை

இலங்கைக்கு உதவிசெய்யும் நாடுகளுடன் கலந்து பேச இம்மாதம்பாரிஸுக்குமீண்டும் செல்லவிருப்பதை நீங்கள் அறிவீர்கள் மேலதிகமாக நிதி தேவைப்படுவதன் அத்தியாவசியத்தை மட்டுமன்றி, மூன்றாம் உலகிலுள்ள ஒரு வளர்முகநாட்டின் வறிய மக்களின் மேம்பாட்டுக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமான தேவைகளைப் பூர்த்தி செய்ய காத்திரமானரீதியிலும், ஜனநாயகரீதியிலும் இந்நிதிபயன் படக் கூடிய சாத்தியப்பாடுகளையும் இலங்கைத்தூதுக்குழு பாரிஸில் நிச்சயம் வலியுறுத்தும்.

பாரிஸுக்கு எடுத்துச் செல்லப்படுகின்ற சேதியின் பிரதான தாற்பரியம் அபிவிருத்தி நோக்கமல்ல மாறாக, தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதத்தை மேலும் மூர்த்தண்யப்படுத்துவதே. இலங்கை தான் பெறுகின்ற உதவிகளை தான் வகுத்துக்கொண்டதாகக் கூறப்படும் நோக்கங்களுக்காகப் பயன் படுத்துகிறதா? புள்ளிவிபரங்களும்நிகழ்ச்சிகளும் இவற்றை ஆதாரப் படுத்துகின்றனவா?

1983 - 1986 காலப்பகுதியில் ஆயுதப்படைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.13 ஆயிரம் கோடியாகும். அதேவேளையில் சுகாதாரத்துறைக்கென ரூ. 7,185 ஆயிரம் கோடியும், கல்வித்துறைக்கு ரூ. 15,576 ஆயிரம் கோடியும்

ஆயுதப் படைகளுக்கான மூலதனச் செலவினத்தில் 1970 க்களுடன் ஒப்பிடும்போது 1980க்களில் பாரிய அளவு அதிகரிப்பு ஏற்பட்டது. கீழ்க்காணும் புள்ளி விபரங்களிலிருந்து இதைத் தெரிந்து கொள்ள முடியும்,

### ஆயுதப்படைகளுக்கான மூலதனச் செலவினம்

| 1974-1976 ஆண்டு | 1984-1986 ஆண்டு | ஓர் ஒப்புநோக்கு அதிகரிப்பு |
|---|---|---|
| 1974-ரூ.17,578,000 | 1984-ரூ 912,430,000 | 53 மடங்கு |
| 1975-ரூ 10,116,000 | 1985-ரூ 1,517,132,000 | 150 மடங்கு |
| 1976-ரூ. 19,400,000 | 1986-ரூ 2,109,843 000 | 108 மடங்கு |

ஆதாரம்:- பதிப்பிக்கப்பெற்ற மதிப்பீடுகள், இலங்கை அரசாங்கம்.

குறிப்பு:-1985க்கும் 1986க்குமான புள்ளி விபரங்களில் முறையே ஏறத்தாழ 20% 30% மேலதிக ஒதுக்கீடுகள் சேர்க்கப்படவில்லை.

1983 ஜனவரி முதல் 1986 மே வரை ஆயுதப்படைக்கான மூலதனச் செலவினமாக ரூ. 6ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டது. இச் செலவினம் அபிவிருத்தி வழிப்பட்டதல்ல, மாறாக, அழிவு வழிப்பட்டதே.

### வெளிநாட்டு உதவி

1978க்கும் 1986க்கும் இடைப்பட்ட ஒன்பதாண்டு காலப் பகுதியில் இலங்கை பெற வெளிநாட்டு உதவி 5,63,018 ஆயிரம் கோடியாகும். வெளிநாட்டுதவியானது இலங்கையின் வரவு செலவுத் திட்ட நெருக்கடிகளைக் குறைக்க நிச்சயமாக உதவுவதுடன், ஆக்க வழிப்பட்ட தேவைகளுக்கன்றி அழிவுகரவழிப்பட்ட செலவினங்களுக்கான நிதியைப் பெறுவதிலும் உதவுகிறது.

பெறப்படும் உதவியில் அபிவிருத்தித் தேவைகளுக்கு எத்தனை சதவீதம் ஒதுக்கப்படுகின்றது என்பது பற்றி உதவி வழங்கும் நாடுகள் அறியுமா?

[8-ம் பக்கம் பார்க்க)

# நாங்கள் போராடுவதை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அளவுக்கு விடுதலைப் புலிகள் தகவல் தொடர்பு வசதிகளை பக்காவாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை இராணுவம் முகாமைவிட்டு ஒரு அடி எடுத்துவைத்தால் விடுதலைப் புலிகளுக்கு தகவல் உடனே வந்து சேருகின்றது. அந்த அளவுக்கு ஆங்காங்கே 'சென்ரி'கள் போட்டிருக்கிறார்கள்.

பதிலடி எதிர்பாராமல், கிடைக்க ராணுவம் திகைக்கிறது!.

தொண்டமனாறு பாலத்தில் ராணுவம் சற்று நகர தகவல் பறந்து விடுதலைப்புலிகள் மின்னல் வேகத்தில் இயங்கிப் பாலத்தின் இன்னொரு பகுதியைக் குண்டு வைத்துத் தகர்ந்து விட்டனர்! ராணுவம் ஸ்தம்பித்து நின்றது.

யாழ் கோட்டையில் உள்ள இலங்கை ராணுவ முகாம் கையைப்பிசைந்து, தலையைச் சொறியும் நிலையில்தான் இருக்கிறது அவர்களுக்குப் போகும் தண்ணீர் சப்ளைகூட விடுதலைப் புலிகளால் 'கட்' செய்யப்பட்டுள்ளது. 'குடிதண்ணீராவது கிடைக்க வழி செய்யுங்கள்' என்று ராணுவஅதிகாரி நேரடியாக விடுதலைப் புலிகள் முகாமுக்குத் தூது அனுப்பிய சம்பவம் நடந்தது. வேறுவழியில்லாமல் ஹெலிகாப்டரில் ராணுவத்துக்குத் தண்ணீர் கொண்டு வந்தார்கள்.

யாழ். மக்களுக்கு குண்டு வெடிப்புகளுக்கு நடுவில் தங்கள் பணிகளைச் செய்வது இப்போது நன்றாகவே பழக்கமாகி விட்டது. விடுதலைப் புலி ள் துப்பாக்கிகளை இயக்கும்போது மக்கள் டீ கொண்டுவந்து தருகிறார்கள். யுத்தத்தை வேடிக்கை பார்க்க கூட்டமாக வருகிறார்கள். அவர்களை புலிகள் வலுக்கட்டாயமாக வீடுகளுக்குத் திருப்பி அனுப்பும் நிலை ஏற்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கு நவீன ஆயுதங்கள் அத்தனையும் அத்துப்படியாக இருக்கிறது. மிலிட்டரி சயின்சைப் புத்தக வடிவில் தமிழில் கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் 'போர் குரல்' என்ற இந்தப் புத்தகம் தமிழில் முதல் முயற்சி. இத்தனை போராட்டத்திற்கு நடுவில் ராணுவத்தைப் பற்றியும் போர்முறைகளைப் பற்றியும் விளக்கமான [illegible] தயாரித்திருக்கிறார்கள்.

பொதுவாக பிரபாகரனுக்குப் புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் அதிகம். உலக நாடுகள் முழுவதிலிருந்தும் 3 லட்ச ரூபாய் பெறுமதியான யுத்த நுணுக்கப்புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு 'போர்க் குரலில்' அவற்றின் கவர்ச்சியான மொழிபெயர்ப்பு தரப்படுகிறது... போர்க்குரல் லே-அவுட்டெல்லாம் பிரமாதம்! இருப்பினும் பிரபாகரன் திருப்தி அடையவில்லை.

''என்னை திருப்திபடுத்துவது எளிதான காரியமல்ல... இன்னும் சிறப்பாகத் தயாரித்திருக்க முடியும்'' என்று சிரித்தார் பிரபாகரன்.

அவரது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கான 'புலி' முத்திரைக்குச் சரியான புலித்தலையைத் தேர்தெடுக்கப் பட்டபாடு சுவையானது. சிவகாசி பட்டாசில் இருக்கும் புலியின் படத்திலிருந்து உலகம் முழுவதும் வெளியாகும் புலிப் படங்கள் வரை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன! எதிலும் அப்படி ஒரு பர்ஃபெக்ஷன் எதிர்பார்க்கிறார் பிரபாகரன். நாளைக்கு ஒரு புலியின் படத்தைப்பார்த்துவிட்டு அடடா இதை உபயோகித்திருக்கலாமே' என்று வருத்தப் படக் கூடாதல்லவா? என்று விளக்கம் தந்தார் அவர். இந்த அணுகுமுறை அவரது எல்லா செயல்களிலும் எதிரொலிக்கிறது.

''எங்கள் இயக்கத்தில் சேருவதற்கும் சட்ட திட்டங்கள் உண்டு. வாழ்க்கையில் விரக்தி அடைந்தவர்கள் யாரும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை, தோல்வி உணர்வு கொண்டவர்களுக்கு இதில் இடமில்லை. அப்படிப்பட்டவர்களுக்குத்தன்னம்பிக்கை இருக்காது... இந்தப் போராட்ட விஷயத்திலும் விரக்திதான் அடைவார்கள்... தமிழ் ஈழம் உடனே கிடைத்துவிடும் என்ற கனவோடும் வரக் கூடாது. போராட்டத்திற்கு கால வரம்பு கிடையாது... தனி ஈழம் கிடைக்க சர்வதேச சூழ்நிலைகள்கூட அனுசரணையாக இருக்க வேண்டிய நிலை உண்டு.

பிரபாகரன் கூறிவிட்டுச் சற்று உணர்ச்சி வசப்பட்டார்.

பிரயாண ஒழுங்கு
எங்கள் முகவர் உங்களை உடன்
டென்மார்க் கொழும்பில் இருந்து
குறைந்த செலவில் நேரே அழைத்துச் செல்வார்.
இங்கிருந்து ஞாயிற்றுக்கிழமை (22-6-86)
கொழும்புக்குப் புறப்பட ஏற்பாடுகள் செய்துள்ளோம்.
உடன் தொடர்பு கொள்ளவும்:
சவுதியில் வருமான வாய்ப்புகள்
உடன் செய்து கொடுக்கப்படும்.
GROUP ATLANTIC,
(அடைக்கலமாதா கோவிலுக்கு அருகாமை)
163, Hospital Road, Jaffna.
(A 71)

சரவணபவன் மினி
10-30, 2-30, 4-45, 7-00
Noon Sunday
Attack, Murder, Thrill
(A only)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா -
சுஜாத்தா-ஜெய்சங்கர்
நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

லிடோ
காலை 10-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-
ஜெய்கணேஷ்-நாகேஷ்
நடித்த
தாயில்லாமல்
நானில்லை
(கலர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 20-6-86

# வசாவிளானில் 8 இராணுவத்தினர் பலி
# எமது தரப்பில் சேதமில்லை
## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

(யாழ்ப்பாணம்)
வசாவிளான் இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை வெளியேவர முயன்ற இராணுவத்தினர்மீது தமது மக்கள் விடுதலைப் படையினர் எதிர்த் தாக்குதல் நடத்தியபொழுது 8 இராணுவத்தினர் பலியானதாக 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ. பி. ஆர். எல். எவ்.) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''வசாவிளான் இராணுவ முகாமிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர் நவீனரக ஆயுதங்களுடன் வெளியே வர முயன்றனர். இவர்களை வெளியேறுது தடுக்கும் முகமாக மக்கள் விடுதலைப் படையினர் நடாத்திய மோட்டார் தாக்குதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் இரு தரப்பினருக்குமிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனை யடுத்து வசாவிளான் முகாமுக்கு இராணுவத்தினர் திரும்பினர். மக்கள் விடுதலை வீரர்கள் தரப்பில் எதுவித இழப்புமில்லை.''

---

# 22 பேர் பூஸாவுக்கு

(வவனியா)
வவனியாவில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டிருந்த இளைஞர்கள் 22 பேர் காலி 'பூஸா' முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

---

யாழ்ப்பாணம்
பல. நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)

## வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 3500 வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு.

கேள்வி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் முடிவுத் திகதி 25 - 6 - 86

பொது முகாமையாளர்
259. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
19 - 6 - 86. A 856

---

யாழ்ப்பாணம்
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

யாழ் பல. நோ. கூ. சங்கத்தின் பிரதான வீதியில் அமைந்துள்ள ரவுண் சொப் கிளையில் தளபாடங்கள்,

## ஏல விற்பனை

இடம்:- பிரதான வீதி.
காலம்:- 29 - 6 - 86
(ஞாயிற்றுக்கிழமை)

நேரம்:- காலை 9 30 மணி தொடக்கம் பி. ப 3. 00 வரை

பொருட்கள்:- பிடவைக் கடை காட்சிப்படுத்தும் தேக்கு மரத்தினால் ஆன கண்ணாடி அலுமாரிகள், கடைகளுக்குத் தேவையான விருக்கைகள், பட்டடைகள் நல்ல நிலையிலானவை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பொது முகாமையாளர்
259, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்,
19 - 6 - 86.
[A 857]

---

## மின் தடை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் - இலங்கை மின்சார சபையின்

### முக்கிய அறிவித்தல்

1986-06-22ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலைகள் காரணமாகக் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 2-00 மணிவரை யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பின்வரும் உப மின் நிலையங்களுக்கு மின் விநியோகத் தடை ஏற்படுமெனச் சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

உப மின் நிலையங்கள்:-

1. கன்னதிட்டி
2. R. G. இன்டஸ்றீஸ்
3. ஐந்து சந்தி
4. மனோகரா
5. தட்டா தெரு
6. கலட்டி

இம்மின் தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு,
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
[A855] சுன்னாகம்,

---

## ஒப்பந்தக்காரர் கைது

(வவனியா)
அரச ஒப்பந்தக்காரரான எஸ். ராஜரத்தினம் என்பவர் ராணுவத்தினரால் கடந்த திங்கட்கிழமை வவனியா கச்சேரியில்வைத்துக் கைதுசெய்யப்பட்டார். (க)

---

## ஐந்தாண்டு நினைவஞ்சலி



வ. இராசையா
(சிவா ஸ்ரோர்ஸ் யானைமார்க் பெப்சி குளிர்பான ஏஜன்சி உரிமையாளர்

மலர்வு: 22-12-1924
உதிர்வு: 14-06-1981
திதி: 20-06-1986

அன்புடன் எங்கள் குடும்பத்து ஒளிவிளக்காய் இருந்து ஒளி வீசி வீட்டு வாழ்வு ஓர் பொய்மைக் கனவென்று நாங்கள் எல்லோரும் நினைக்கும் விதத்தில் மின்னுமல் முழங்காமல் எம்மைவிட்டுப் பிரிந்து இறைவன்பாதம் சென்றுவிட்டீர்கள் ஐயா! தங்களை எங்களிடமிருந்து இறைவன் பிரித்துவிட்டு ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் நீங்கள் எங்களுடன்தான் இருக்கின்றீர்கள்என்றசிந்தனையில்தான் கடந்த நாட்கள் மாதங்களாய் வருடமைந்தாகி வருகின்ற பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் ஐயா.

உங்கள் சிந்தனையில்
உயிர்வாழும்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்.
சிவா ஸ்ரோர்ஸ்,
65, சிவன்பண்ணைவீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
((C 2992)

---

# எமது பிரதேசங்களில் ....

[1ம் பக்கத் தொடர்ச்சி]
கள்: தலைவர் திரு. என். பாலகிருஷ்ணன் (கலைப் பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்).

நெல்லின களைகளைக் கட்டுப்படுத்தல்: திரு. இ. மா. பாலசுப்பிரமணியம். பயிர்களைத் தாக்கும் பீடைகள்: செல்வி பத்மினி மயில்வாகனம். பயிர் வகை நோய்களும் தடுப்பு முறைகளும்: கலாநிதி பா. சிவகடாட்சம்.

பிற்பகல் 1-00 — 3-00 வரை

விவசாயத்தில் விநியோகம்: தலைவர்: திரு. என். பாலகிருஷ்ணன் [கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்], நெல் அறுவடையின் பின் திரு ம கி. வில்பிரட், நெல் தவிர்ந்த உற்பத்திகளை களஞ்சியப்படுத்தலும், சந்தைப்படுத்தலும், திரு. ச. கிருஷ்ணபிள்ளை [உதவி விவசாயப் பணிப்பாளர்] கலந்துரையாடல்

### கருத்தரங்கு தரப்போவது...

* எமது பிரதேசங்களில் விவசாயத்துறையில் எம்வசமுள்ள வளங்கள், தற்போதைய உற்பத்தி விநியோகப் போக்குகள், நெருக்கடி நிலையில் சுயதேவைப் பூர்த்திபற்றிய அனுமானங்கள். தொலை நோக்குத் திட்டங்களுக்குரிய ஆய்வுரைகள் ஆகியவற்றை இக்கருத்தரங்கு தரவிருக்கிறது.

* இன்றையகாலகட்டத்தில் விவசாயத்துறையில் முழுமூச்சாக ஈடுபட்டுவரும் ஒவ்வொருவரும் இலாப நோக்கையே குறிக் கோளாகக் கொண்டு கொழும்புச் சந்தை மீதேநாட்டம் கொண்டு உற்பத்தியில் ஈடுபடுவதைக் குறைத்துக்கொண்டு தேசிய நலனுடன் தம்மை இணைத்துக்கொண்டவர்களாகச் சுயதேவைப் பூர்த்திக்குரிய விவசாய நடுகைகளில் ஈடுபடவேண்டுமெனவும் இக்கருத்தரங்கு வலியுறுத்தப்போகிறது.

* எரிபொருள் முதலான எதிர்காலத் தட்டுப்பாடுகளை உணர்ந்து மிருக வலுவின் பயன்பாட்டை எமக்குரியதாக மாற்றி பொருத்தமான தொழில்நுட்பத்தை எவ்வாறு புகுத்தவேண்டு மென்பதையும் இக்கருத்தரங்கு தரும். (மா)

---

# ஹெலி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
யும் தாழப்பறந்து எமது தாக்குதலை முறியடிக்க முயன்றபோது எமதுதரப்பினர்அவைகளை நோக்கி சுடத்தொடங்கியதும் அவை பின்வாங்கிவிட்டன.

சேதமான 'ஸ்கவுட்' காரின் பாகங்கள் சில எம்மால் எடுக்கப்பட்டன. இத்தாக்குதலை எதிர்கொள்ள முடியாது இராணுவம் முகாம் திரும்பியதும் அங்கிருந்து சுமார் 60 மோட்டார் ஷெல்களை வெளியே ஏவினர்கள்.

### முல்லைத்தீவில்

''முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்தும் நேற்று நண்பகல் புதுக்குடியிருப்பு நோக்கி நடை பவனியாக வர முயன்ற இராணுவத்தினர்மீது முல்லைத்தீவு ஆஸ்பத்திரி முன்பாக எமது தரப்பினர் நேரடி மோதல் தொடுத்தபோது பலர் படுகாயமடைந்தனர். இச்சம்பவத்தின்போது ஹெலிகொப்டர் வந்து தாழப்பறந்து தாக்குதல் நடாத்தியது. அதனை நோக்கி எமது வீரர்கள் சுட்டபோதுசேதமடைந்த ஹெலிகொப்டர் முகாமை விட்டு வெளியே இறக்கப்பட்டது. அதற்கு இராணுவத்தினரால் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது. எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை''மீண்டும்ராணுவம் முகாம் திரும்பியது. பொம்பர்களின் தாக்குதலும் நடைபெற்றது.'' [யா]

---

# உங்கள் உதவி அரச பயங்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைநிலப்பரப்பில் 27 சதவீதத்தை உள்ளடக்குவதும் வாழும் மக்களில் 95 சத வீதமானோர் தமிழர்களாக உள்ளதுமான வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு எத்தனை சதவீத உதவி ஒதுக்கப்படுகின்றதுஎன்பது பற்றி உதவி வழங்கும் நாடுகளுக்கு அறிக்கை செய்யப்பட்டதா? உதவி வழங்கும் நாடுகள் கருத்தில்கொள்ள வேண்டிய விஷயங்கள் இவை. 1979 — 1982 காலப்பகுதியில் ஆயுதப்படைகளுக்கான செலவினங்கள் ஆண்டுக்குச் சராசரி ரூ. 0.95 ஆயிரம் கோடியாக விருந்தது. 1983 க்கும் 1986 க்குமிடைப்பட்ட நான்காண்டு காலத்தில் ஆயுதப்படைகளுக்கான செலவினம் ஆண்டுக்குச் சராசரி ரூ. 3.75 ஆயிரம் கோடியாக விருந்தது. ஆண்டுக்கு ரூ. 1.5 ஆயிரம் கோடி ஆயுதப்படைகளுக்கான மாமூல் செலவினளாக ஒதுக்கப்பட்டிருந்த பொழுதிலும், இலங்கையில் 'புலிகளை வேட்டையாடுவதற்கென' ரூ. 9 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இக் காலப்பகுதியில்'புலிவேட்டை' வலையில் ஆக 350 'புலி'களே சிக்கிய அதேவேளையில் யுத்த பூமிக்கு 700 புதிய 'புலி'கள் வந்துள்ள உண்மையை உதவி வழங்கும் நாடுகள் அறியுமா?

ஒரு 'புலியைப் பிடிப்பதற்கு ரூ 42 லட்சம் செலவாகின்றது என்பதை உதவிவழங்கும் எந்தவொரு நாடும் அறியுமா?

அரசினுல் தொடர்ந்து அழிவுப்பாதையில் இட்டுச்செல்லப்படும் விவசாயப்பொருளாதாரத்துறையினையும்,தொழிற்றுறைக் கட்டுமானத்தையும், குறிப்பாக நாட்டின் வட கிழக்குப் பகுதிகளில் புனர்நிர்மாணஞ் செய்வதற்கு எதிர்காலத்தில் எத்துணை உதவி தேவைப்படும் என்பது பற்றி இலங்கைக்கு உதவி வழங்கும் எந்தவொரு நாடும் அறியுமா? பெறுகின்ற உதவியை மீளளிப்பதற்கென நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு இலங்கை ஸ்திரப்படுத்தப்போகின்றது?

சுருங்கக்கூறின் வசிப்பிடத்துடனும் தேவையான வசதிகளுடனும் ஒரு ஏக்கர் விவசாயக் காணியை ஒரு குடும்பத்திற்கு வழங்குவதற்கு இலங்கைக்கு ரூ 0 075 லட்சமே செலவாகும். ஆனல் ஒரு'புலி' யைக்கொல்லுவதற்கு இலங்கை அரசு ரூ 420 லட்சத்தைச் செலவழிக்கிறது. இந்த நிதியைக்கொண்டு 560 சிங்கள அல்லது தமிழ்க் குடும்பங்களுக்கு இலகுவில் நல் வாழ்வு தரமுடியும்.

பிறிதொரு நாட்டிலுள்ள மக்களின் இன்னுயிர்களை இரைகொள்ளத்தான் தமது மக்களின் செல்வம் உதவியென்ற பேரில் உறிஞ்சப்படுகின்றது என்ற உண்மையை உதவி வழங்கும் நாடுகள் அறியுமா?

---

## மரண அறிவித்தல்

### அன்னம்மா ஆறுமுகம்

காரைநகர், பாலாவோடை திருமதி அன்னம்மா ஆறுமுகம் அவர்கள் 17.6.86 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். இவர் ஆ. ச. ஆறுமுகம் [ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர் காரைநகர், பரந்தன், கொழும்பு] அவர்களின் அன்பு மனைவியாவர். அன்னரது ஈமக்கிரியைகள் இன்று 20.6.86 வெள்ளிக்கிழமை காலை10 மணியளவில் தில்லை மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

சி. நேசேந்திரன்,
65/2, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(C- 2990)

### அந்தோனியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

சில்லாலை அந்தோனியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை [இராசம்மா] 19-06-86 வியாழக்கிழமை காலமானர். இவர் காலம்சென்ற நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (நாகசெட்டி கமம் - நானட்டான்) அவர்களின் அன்புமனைவியும், ரேசம்மா (பேபி), Dr நீக்கிலாப்பிள்ளை (U. K.), பற்றிமா புஸ்பம் (U. K.), மரியநாதன், மில்ரன், வரதராசன் (சூடான்), இரகுநாதன் (U. K.), வசந்தகுமாரி (வசந்தி, சென்னை) ஆகியோரின் தாயாரும். Dr திருமதி ஒலிவெற் நீக்கிலாப்பிள்ளை (U. K.), கருணனந்தன் (U. K.), இந்திரா, ஞானம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். இறுதிச்சடங்குகளின் விபரம் பின்புஅறியத்தரப்படும், உற்றார் உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.
தகவல்:- வசந்தி
[C-2999]

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu Telephone 23389
24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org